ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பரிதாபி
தை

February
1973

தொகுதி 35
பகுதி 2

Vol. 35
No. 2

ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I M.

கால் ஆடுகிறது	...	21
எளிய வைத்தியம்	...	24
கிரஹணீ தொடர்ச்சி	...	28
மலபந்தம்	...	34

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய
ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered THE ARYA VAIDYA SALA KOTTAKAL Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27
(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை:

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள்:

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும் எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்

31-A, சின்னகடைத் தெரு,

திருச்சிராப்பள்ளி-2.

போன் எண் : 4202

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்,

300 கிராம் பாட்டில் ரூ. 5.

பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5-50

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00   12 ML. ரூ. 3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441   வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].

ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

தொகுதி 35	பரிதாபி தை	பகுதி 2
Vol. 35	1973 பிப்ரவரி	No. 2

श्री धन्वन्तरये नमः

கால் ஆடுகிறது

மருத்துவத் தொழிலுக்கு நான்குகால்கள் உண்டு என்கிறார் வாக்படர். அது ஒரு நாற்காலி. ஏதேனும் ஒரு காலில் ஊனமிருந்தாலும் நாற்காலி உட்கார்பவனைக் கீழே தள்ளும். வைத்யர் (டாக்டர்), மருந்து, (மருந்துக்கடை) வைத்யரின் உதவியாளர் (கம்பவுண்டர், அனஸ்தெடிஸ்ட், லாபரேடரி டெக்னீஷியன், பேதாலஜிஸ்ட், நர்ஸ் முதலானோர்) நோயாளி என நான்கு கால்கள். இந்த நான்கும் ஒரு முனைப்பட்டிருந்தால் கடுமையான தீராத நோயிலுப்கூட குணம் காண முடியக்கூடும். ஏதேனும் ஒன்று ஆடினாலும், நான்குமே தளர்ந்தாலும் எளிதில் தீரும் நோய்கூட முடிவிற்கு அழைத்துச்செல்லக் கூடும்.

இந்த நான்கும் இன்று கடகடத்து வருகிறது. வைத்திய விஞ்ஞானத்தை முழுதும் முறைப்படி கற்றுத்தேற வாய்ப்பில்லாதவர்களுக்கு, பகட்டான வழியில் எளிதில் பட்டம்பெற வழி; கல்லூரிகளில் நுழைவிற்கும் தேர்விற்கும் பணம் உதவும் கோரநிலை, ஒருமுறையில் தொழில்பயின்று வருபவர்களை, 6-7 மாதம் பயிற்சி அளித்து மற்றொரு முறையில் சிகித்ஸை செய்ய அனுமதிக்கும் திட்டங்கள், இவை வைத்யனின் தகுதியைப் பல வழிகளிலும் தாழ்த்தி வருகின்றன.

வைத்யருக்கு அடங்கி அவரது மனப்போக்கிற்கும் தொழிற் தேவைக்கும் உதவிவந்த உதவியாளர்களின் நிலை அங்கு ஏற்பட்டுள்ள புரட்சியின் பெயரால் நோயாளிக்கு அவர்கள் உதவும் எண்ணம் அவர்களிடம் மறைந்துவிடக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி உள்ளது.

ஔஷத உற்பத்தித்துறை வைத்யரின் செல்வாக்கில் அடங்கியிருந்த காலம்மாறி அத்துறையின் ஆளுகைக்கு உட்பட்டு வைத்தியர் நடக்கும் காலமாக மாறிவிட்டது. அந்த செல்வாக்கு பெற்ற பிறகு ஏற்படும் செல்வப்பெருக்கு, அதில் உள்ள மோஹத்தால் தகுதியற்றவர்களும் அத்தொழிலில் ஈடுபடுதல், தரக்குறைவான மருந்து உற்பத்தி, மருந்தைச் சாப்பிடுவதாலேயே நோயும் மரணமும், மருந்தால் ஏற்படும் கொடும் விளைவுகளைத் தவிர்க்கவே மருந்து உற்பத்தி, அதிலுள்ள கெடுபிடி என்ற வரிசையில் தினமும் இத்துறை பத்திரிகைகளில் செய்தி தரும் துறையாக மாறிவிட்டது. டாக்டர் எழுதிக்கொடுத்த மருந்தைச் சாப்பிடலாமா? இந்தக் கடையில் வாங்கிய இந்த மருந்தைச் சாப்பிடலாமா என்ற பெருத்த பயங்கரக் கேள்விக்குறி மனத்தில் எழுந்து வருவதைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு நோயாளி மருந்தை ஏற்கும் நிலை வந்துவிட்டது. வைத்யர் கையில் மண்ணை அள்ளிக் கொடுத்தாலும் அது அப்ருதமாக இருக்கும் என்ற நம்பிக்கை மறைந்து டாக்டர் கொடுத்தது விஷமாக மாருதிருக்கவேண்டுமே என்ற திகிலுடன் நோய்க்குச் சிகித்ஸை பெறும் நிலையைக் காண்கிறோம்.

வைத்தியர், உதவியாளர், மருந்து என்ற இந்த மூன்று பகுதிகளும் செயலாற்ற வேண்டிய இடம் நோயாளி. இந்த நோயாளியை ஆதாரம் என்று கருதாமல் அந்த மூன்று கால்களுடன் இவனையும் ஒரு கால் என்று குறிப்பிடுவதில் ஒரு விசேஷம் உண்டு. நோய்க்குச் சிகித்ஸை எனும் பணியில் அவனது ஒத்துழைப்பிற்கும் தனிப்பட்ட முக்கியத்துவம் உண்டு. நோய் அறவே நீங்கத்தக்க சூழ்நிலையை உண்டாக்கிக் கொடுக்கும் முழுப்பொறுப்பும் அவனுடையது நோய் சமனமாவது குணமாவது என்று இரண்டு நிலை உண்டு. இன்று பெருவாரிநோய்கள் சமனமடைகின்றனவே தவிர குணமாவதில்லை. சமனம் என்றாலே அனேகமாக தாற்காலிகமாக நோயின் வெளித் தோற்றம் மறைந்துள்ளதே தவிர, நோய் வரக்காரணமாக இருந்த நிலை மாறவில்லை என்றே கொள்ளவேண்டும் நோய் ஏன் அறவே நீங்கவில்லை? வைத்யரின் குறையா? மருந்தின் குறையா? இரண்டின் குறையாகவுமிருக்கலாம். இவ்விரண்டையும் விட நோயாளிக்கு அந்த விஷயத்தில் சிரத்தைக் குறைவும், தாற்காலிக நோய் நிவிருத்தியிலேயே அதிக நாட்டமும் முக்கிய காரணமாகும்.

நோய் அறவே நீங்கும்வரை பொறுமையில்லை. நோய் நீங்கத்தக்க காலவரை நம்மிஷ்டப்படி குறுக்கிக்கொள்ள முடியாத தொன்று. காலவரையைக் குறுக்கிக்கொள்ளும் பரப்பில் நோய் அறவே நீங்குவதில் சிரத்தை காட்ட முடியவில்லை. இவருக்குள்ள சிரத்தைக் குறைவு டாக்டரிடமும் பிரதிபலிக்க, தாற்காலிக வேதனைக் குறைப்பையே வைத்யமாகக்கொள்ளும் மனப்பான்மை டாக்டரிடம் நிலைத்து விடுகிறது. எதிலும் குறுக்குவழி கண்டு பிடிப்பதிலேயே நாட்டம். குறுக்கு வழியில் செல்லும் ஸாஹஸச் செயல் ஆபத்தில் கொண்டு விடுகிறது.

ஆக இந்த நான்கு கால்களும் ஆட்டம் கொடுத்துள்ள நிலையில் நோய் பெருக்கு–நோய் நீங்காமை, என்ற இரு வேதனைகள் ஏற்பட்டுள்ளன. ஒரு புறம் விஞ்ஞான அபிவிருத்தியால் வாழ்நாள் நீள்வது மறுபுறம் நீண்ட வாழ்நாளை நோயுடன் கழிப்பது என்ற தர்மசங்கடநிலை.

இந்த நிலை இன்று நவீன வைத்ய முறைப்படி நடக்கும் சிகித்ஸையிலேயே காணக்கிடைக்கின்றது. அந்த சிகித்ஸையில் சலித்து நாட்டு வைத்ய முறையை அணுகுபவர்களிடையே ஓரளவு நோய் நீங்குமளவு சிரத்தை காணப்பெறுகிறது. எனினும் அரசினரின் உதவியால் ஆங்காங்கு நாட்டு வைத்ய ஆஸ்பத்திரிகள் ஏற்பட்டுள்ளன. இவைகளுக்காகப் பெருமளவில் மருந்துகள் தயாரிக்கப்பெறுகின்றன. நாட்டு முறை டாக்டர்களிடமும் பொது மக்களின் எதிர்பார்வை சமன விஷயத்தில் தான் அதிகம் ஏற்பட்டிருக்கிறது ஆகவே நோய் அறவே நீங்கும் விஷயத்தில் இவர்களது சிரத்தையும் குறையக்கூடும்.

மருந்து தயாரிப்புத்துறை இன்றளவில் நல்ல வைத்யர்களிடமே உள்ளது. லாப நோக்குடன் விற்பனையில் ஈடுபடுபவர் இனி இத்துறையில் நுழைய இடமுண்டு. அப்போது நவீன வைத்யத்துறையில் காணப்பெறும் தர்மசங்கட நிலை நாட்டு வைத்யத்திலும் தோன்ற இடம் உண்டு. ஆகவே கவனத்துடன் இயங்கும் தருணம் என நாட்டு வைத்தியர்களை ஞாபகப்படுத்துவது இன்றளவில் அவசியம். புஷ்டியில்லாத கால்களாக இருந்தாலும் ஆட்டம் காணுமல் இருப்பதால் நாட்டு வைத்யம் இந்த நிலையிலும் பெயர் சொல்லிக்கொள்ள முடிகிறது. இதில் சிரத்தைத் தளர்ச்சி பெருங்கேட்டிற்கு வித்தாகலாம். ஆகவே இதில் கவனம் தேவை. நல்ல தேர்ந்த வைத்தியர்களே தேவை. சிறந்த முறையில் தயாரிக்கப்பெற்ற மருந்துகளே தேவை. நோயாளிக்கு அறவே நோய் நீங்கு முறையில் நாட்டம் ஏற்படுத்துவதே இன்று நாட்டு வைத்யர்கள் செய்யக் கூடிய சிறப்புப்பணி.

எளிய வைத்யம்

வைத்ய V. S. பஞ்சநதசர்மா, திருச்சி-2.

வ்ருத்த வைத்யம், பால ஜோசியம், என பலர் பன்முறை சொல்லக் கேட்டிருக்கிறேன். அதன் பொருள் என்ன என்பதை காலப்போக்கில் அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்து கொண்டேன். வைத்யத்தில் அனுபவம் மிக முக்கியமாகவும், ஜோசியத்தில் ஞாபக சக்தி மிக முக்கியமாகவும் தேவைப்படுகின்றன. பல வைத்திய புஸ்தகங்களை படித்திருந்தால் மட்டும் ஒரு நோயின் தன்மையையும், அதற்குத் தகுந்த சிகிச்சையையும் தெரிந்து நிச்சய புத்தியுடன் செய்ய முடியாது. பல பெரியோர்களின் தெளிந்த அனுபவங்களும், தன் புத்தி சக்தியாலும் உண்டான அனுபவங்களுமே வைத்தியத் துறையில் மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகிறது. இந்த சிறந்த அனுபவம் உண்டாகவேண்டுமெனில் ஒரு வைத்தியனுக்கு அவன் ஆயுளில் பாதிக்குமேல் கழிந்துவிடும். அவ்வயதில் எந்த நோயையும், அதற்குள்ள பரிகாரங்களையும் அறிந்து அனுயாசமாகச் செய்ய முடியும்.

ஜோசியத்தில் முழுவதும் கணிதமே மிகவும் முக்கியம். கணிதத்திற்கு ஞாபக சக்தி மிக முக்கியம். ஞாபக சக்திக்கு இந்திரியங்களிலும், புத்தி சக்தியிலும் சுறுசுறுப்பு உள்ள இளமைப் பருவம் மிக அவசியம். கணிப்பதில் ஒரு எண்ணிக்கைத் தவறினாலும் சொல்லும் ஜோசியப் பலன் நேர்மாறாக ஆகக்கூடும். ஆகவே தான் வ்ருத்த வைத்யம் பால ஜோசியம் எனக் கூறுவதாக நான் நினைக்கிறேன்.

ஞானிகளும், மிகுந்த அனுபவசாலிகளுமான நம் முன்னோர்களின் அனுபவ கிரந்தங்களான, சரகசம்கிதை சுஸ்ருதசம்கிதைப் போன்ற கிரந்தங்களைப் படித்தும் வியாதிகளையும் அவைகளுக்கான பரிகாரங்களையும் நாம் தெரிந்து செயல்பட முடியவில்லை காரணம் அவர்களின் உபதேசங்களில் கவனக்குறைவும், தாழ்வு மனப்பான்மையும் தான். இப்பொழுது மன மயக்கத்தைக் கொடுக்கும் நவீன வைத்ய முறையும் பலன் அளிக்காமல் போகும் சமயம் தான் முன்னோர்களின் ப்ராசீன கிரந்தங்களையும் அவைகளில் உள்ள உபதேசங்களையும் சரணடைகின்றோம். இவ்வித சூழலில் உண்டான என் ஒரு அனுபவத்தைக் கொண்டது இக்கட்டுரை.

1960-ம் வருடம் மே மாதம் 27-ம் தேதி மாலை என் வைத்ய சாலையில் நோயாளிகளை பரிசோதித்து சிகிச்சை செய்துகொண்டு இருந்தேன். அவ்வமயம் ஒரு நோயாளி மிகவும் வேதனையுடன் நடக்கவும், நிற்கவும் முடியாமல் சிரமப்பட்டுக்கொண்டு இருந்தார். அந்நோயாளி கால் வைத்த இடமெல்லாம் நீர் கசிந்து ஈரமாகக் காணப்பட்டது. பிறகு கவனிக்கும் சமயம் கால் விரல்களின் மேல் புறத்திலிருந்து, முழங்கால் வரை [வலது கால்] சிறு சிறு கொப்பளங்களும், வீக்கமும், நீரும் வடிந்துகொண்டு இருந்தது. குத்து வலி இருப்பதாகவும் பல டாக்டர்களின் ஊசிகளாலும் மருந்துகளாலும் குணம் கிடைக்கவில்லை யென்றும் ஒரு மாதமாக இவ்விதம் வேதனைப்படுவதாகச் சொன்னார். முதலில் வீக்கத்திற்கு காரணமான நீர் வடிதலை குறைப்பதற்கு வழி தேடினேன். எதிர் பாராமல் மண்ணின் பிரயோகம் ஞாபகத்திற்கு வரவே உடனே காரியத்தில் இறங்கலானேன். ஒரு நல்ல குளத்தின் பக்கம் இருக்கும் வயலில் ஆறு அங்குலம்வரைத் தோண்டி மேல் மண்ணை நீக்கி கீழ் உள்ள மண்ணை எடுத்து நன்கு தண்ணீரில் அலசி சுத்தம் செய்து அந்த மண்ணை கால் விரல்களிலிருந்து முழங்கால் வரை வீக்கம் உள்ள இடங்களில் தடவி வைத்தேன். நான்கு மணி நேரம் கழித்து அதை எடுத்துவிட்டு அதேபோல் மண்ணைப் பத்துப் போட்டேன். இதேபோல் 4 மணிக்கு ஒரு முறை செய்து வரும்போது நான்காவது முறை ஜலம் (நீர்) கசிவது குறைந்து வீக்கம் குறைய ஆரம்பித்தது. மறுபடியும் இம்முறையையே கையாண்டதில் ஒன்பதாவது முறை வீக்கம் முழுவதும் வற்றி வலியும் அறவே குறைந்து விட்டது பிறகு ஜாத்தியாதி கிருதம் என்ற நெய்யை மேலுக்குத் தடவச் செய்தேன். ஆரம்பம் முதல் ஆரோக்யவர்த்தினி என்ற மருந்தை தினம் 3 வேளை தேனில் கொடுத்து வரச் செய்தேன். வீக்கம் முழுவதும் குறைந்த பிறகு குக்குலு திக்த கிருதம் ஆரோக்ய வர்த்தினிக்கு பதிலாக தினம் 2 வேளை (காலை, மாலை) ஒரு மாத காலம் வரை கொடுத்தேன், நோயும் அறவே நீங்கி விட்டது.

1965-ம் வருடம் பிப்ரவரி மாதம் 15-ம் தேதி, இடது தொடையில் மூன்று அங்குலம் அகலமுள்ள சிரங்கு, வீக்கத்துடனும் சீழ் வற்ருமல் வடிந்து கொண்டும் ஒரு நோயாளி வந்தார், அவருக்கு சிறுநீரில் சக்கரை இருப்பதாக சிறுநீர் பரிசோதனையில் (urine) தெரிய வந்தது ஆகாரத்தில் பத்தியமாக இருக்கச்செய்து தினம் மூன்று வேளை ஆரோக்யவர்த்தனி தேனுடனும், வசந்த குசுமாகரம், சந்த்ரபிரபாவடி இரண்டும் சேர்த்து இரண்டு வேளை பாலில் உள்ளுக்கு கொடுத்து வந்தேன். மேல் உபயோகமாக 2 வேளை முன் சொன்ன மண்பிரயோகம் செய்தவுடன் சீழ்

கோத்துக்கொண்டு (Pus) அடைபோல் வெளி வந்தது. மறு முறையும் மண்பத்து போட்டவுடன் படிப்படியாக சீழ் (Pus), வீக்கம் முதலியன குறைந்து புண் ஆற ஆரம்பித்து ஒரு வாரத்தில் குணமாகி விட்டது.

சென்ற ஆண்டு தான் என் கிராமத்தில் தொடர்ந்து நான்கு நாட்கள் தங்கும்படி நேர்ந்தது 2-ம் நாள் பகல் என் நண்பர்களுடன் நான் பேசிக்கொண்டு இருந்தேன். அவ்வமயம் ஓர் நபர் தனது வலது கையை ஒரு துணியால் மூடிக்கொண்டு என்னிடம் வந்தார். விசாரித்ததில் அவர், பக்கத்திலிருக்கும் மலைக்காடுகளில் விறகுவெட்டி ஜீவனம் செய்து வருபவரென்றும் 2 நாட்களுக்கு முன்பு விடியற்காலையில் அடர்ந்து இருக்கும் செடி, கொடிகளை விலக்கிக்கொண்டு விறகு வெட்டச் சென்ற சமயம் ஒரு நாகப் பாம்பு கடித்து விட்டதாகவும் உடன் சென்றவர் அவரைத் தூக்கி வந்து அந்த கிராமத்திலிருக்கும் மாந்திரிகரிடம் காண்பித்து பாடம் முதலிய போட்டு உயிர் வந்ததாகவும் தெரியவந்தது. அவருடைய கையை கவனித்ததில் புறங்கை வீக்கமாகவும் ஒரு அங்குல அகலம் சிறங்கும், நீரும் வடிந்து கொண்டு இருந்தது. என் கையில் மருந்துகள் எதுவும் இல்லாத அந்நேரத்தில் என்ன செய்வதென்று புலப்படாமல் யோசிக்கும்போது நல்லகாலமாக மண் பிரயோகம் ஞாபகத்திற்கு வந்தது. உடனே வேப்பிலையை தண்ணீரில் வேகவைத்து அந்த தண்ணீரால் சிறங்கை கழுவி நல்ல மண்ணாக எடுத்து பத்து போட்டேன். இவ்விதம் 2 முறை செய்து மறுநாள் பார்த்ததில் நீர்வடிதல் குறைந்து வீக்கம் பாதிக்குமேல் குறைந்து காணப்பட்டது. அன்றும் அதே மாதிரி நான்கு முறை பத்து போடச் செய்தேன். நன்றாக வீக்கம் வற்றியவுடன் தேன், நெய் இவ்விரண்டையும் கலந்து தடவி வரச் செய்தேன். இப்படி நவீன வைத்ய முறைகளாலும் சாதிக்க முடியாத அதிசயத்தக்க குணங்களைக் கொடுக்கும் மண்ணின் இயற்கை குணங்கள் என்ன? எவைகளில் எளிய முறையில் மண்ணை உபயோகிக்கலாம் என்று ஆராயும் போது நம் ப்ராசீன கிரந்தங்களான சரகம், சுஸ்ருதம், நிகண்டுக்கள் விடை கொடுக்கின்றன.

"ம்ருத்திகா பாவனி ப்ரோக்தா ரஸ ஷித்த விதாயிகா தம்ஸ்ாதி ஸர்வ சோபானும் ஹந்திரி லேபேன யோஜித: தன்வந்திரி நிகண்டு"

(3. ஸர்க்கம்)

ஆயுர்வேத சித்தாந்தப்படி எப்பொருளும் வாயு, பித்தம், கபம் ஆகிய மூன்றின் தொடர்புள்ளவைகளே. இக்கோட்பாட்டிற்கு மண் விதி விலக்கல்ல. ஒவ்வொரு தேசம் ஒவ்வொரு இடத்திற்

கும் தகுந்தாற்போல் பேதப்பட்ட குணமுள்ளவைகளாகவே மண்ணும் காணப்படுகின்றது. உதாரணமாக பாண்டுரோக ப்ரகரணத்தில் மண் சாப்பிட்டு உண்டான பாண்டு ரோகத்திற்கு சிகிச்சை சொல்லுமிடத்து வரும் ஸ்லோகமாவது, ம்ருத்திகாதன சீலஸ்ய குப்யத்யன்யதமோமல: கஷயா மாருதம், பித்தம் ஊஷரா, மதுரா கபம்,

கோபயேந் ம்ருத் ரஸாத்ம்ச்ச ரௌக்ஷ்யாத் புக்தம் விருக்ஷயேத்.
(சரகம். சிகித்சை. அத்யா. 16 ஸ்லோகம் 25–26)

இதுபோல் வீக்கமோ, வ்ரணங்களோ, திரிதோஷ கோட்பாட்டை மீறினவை அல்ல.

ஆக வாயு, பித்தம், கபம் இம்மூன்றில் ஒவ்வொன்றின் குணமுடைய வ்ரணம், சோபம் ஆகியவைகளில் அதற்கு நேர் மாறுன குணமுள்ள மண்ணையே பற்றுபோட உபயோகித்தல் மிகவும் நன்மை பயக்கக்கூடியது.

''ஜகத்யேவம் அநௌஷதம்'' என்றபடி ஆண்டவன் படைப்பில் உலகிலுள்ள எல்லா பொருளுமே ஔஷதமாக பயன்படக்கூடியது என்ற மகான்களின் வாக்கு பொய்க்குமோ?

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

கிரஹணீ - தொடர்ச்சி

ஆயுர்வேதாசார்ய B. வைத்யநாதன், சென்னை.

இவ்விதம் மாம்ஸதாதுவும் அஸ்திதாதுவும் தான் இலக்கணப் படியான ஆமாசயமும், பக்வாசயமுமாகும்.

மேலும்,

''ஸ்தாநாந்யாமாக்நி பக்வாநும் மூத்ரஸ்ய ருதிரஸ்ய ச |
ஹ்ரு துண்டுக: புப்புஸச்ச கோஸ்ட இத்யபிதீயதே |.

என்ற விளக்கப்படி ஸப்ததாதுக்களுக்கு கோஷ்டம் என்று பெயர். அவ்விதமானால் சரீரத்தில் ஸப்ததாதுக்கள் இல்லாத இடமே இல்லையல்லவா. எந்தப்பகுதியை எடுத்துக்கொண்டாலும் அங்கெல்லாம் ஸப்ததாதுக்களை விளக்கலாம். அந்தந்த தாதுக்களுடே அமைந்த அக்னியை கோஷ்டாக்னி எனலாம்.

நிற்க, இப்பொழுது இந்த தாதுக்களுக்கும், இந்த ஆசயங்களுக்கும் இடையே,

தாத்வாசயாந்தரஸ்தஸ்து ய: க்லேதஸ்த்வதி திஷ்டதி |
தேஹோஷ்மணு விபக்வோய: ஸா கலேத்யபிதீயதே ||

என அமைந்துள்ள கலைகள் என்பது என்ன ?

''கலா: ஸப்த ஸ்நாயுச்லேஷ்ம ஜராயுபி: | சன்னு: கோசாக்நிபி: பக்தா; தா தாதூநாந்தராந்தரா ஸீம பூதாச்ச தாதூநாம் காஷ்டஸா ரோபமா மதா''

எனவும்,

''யதா ஹி ஸார: காஷ்டேஷு சித்ய மானேஷு த்ருச்யதே |
ததா தாதுர்ஹி மாம்ஸேஷு சித்ய மானேஷு த்ருச்யதே ||
ஸ்நாயு பிச்ச ப்ரதிச் சந்நான் ஸந்ததாம்ச்ச ஜராயுணா |
ச்லேஷ்மாணும் வேஷ்டி தாம்ச் சாபி கலாபாகாம்ஸ்து தான் விது: |
(ஸு. சா. 4, 6-7.)

என்று சரீர அவயவத்தைக் குறுக்காக வெட்டும்போது மாத்தில் பாய்ந்த வைரம்போல் காணப்படும் இடங்கள்தான் கலா எனப் படுகின்றன என்கிறுர்கள். மேலும் அவை மிக மிக மெல்லிய ஜவ்வுகளாலும் கபத்தாலும் மிக மிகச் சிறிய நரம்புகளாலும் பின்னப்பட்டிருக்கும் எனவும் கூறுகிறுர் இவைகள் மாம்ஸதரா, ரக்ததரா, மேதோதரா, ச்லேஷ்மதரா, புரீஷதரா, பித்ததரா,

சுக்ரதரா என ஏழு வகைப்படுகின்றன. இவற்றுள் முறையே மாம்ஸத்தின் வெளிப்புறத்திலும், உட்புறத்திலும் மாம்ஸதரா, ரக்ததரா என்ற கலைகள் அமைந்துள்ளன. இரண்டு பொருள்கள், ஒன்றுசேரும் இடங்கள் அனைத்திலும் ச்லேஷ்மதரா கலாவும், உதரம், சிறிய, பெரிய எலும்புகள் இவற்றில் மேதோதரா கலாவும் அமைந்துள்ளன. பக்வாசயம் என்று பெயர்கொண்ட அஸ்தி தாதுவில் அமைந்துள்ள புரீஷதராகலா, ஆமாசயம், பக்வாசயம் என்று பெயர்கொண்ட மாம்ஸதாது, அஸ்திதாது இவற்றின் மத்தியிலுள்ள மேதோதாது தாதுதான் பித்ததரா கலாவின் உறைவிடம். இந்த மேதோ தாதுவின் கெடுதிதான் பித்ததரா கலாவின் கெடுதி இந்தப் பித்ததராகலாவின் கெடுதிதான் "விஸ்ரம்ஸயத்யதோப்தாதும் ஹத்வா தேனைவ சாலனம்" என அதிஸாரத்திற்குக் காரணமாகிறது. அங்கு திரவமாகப் பரிணமிப்பது மேதோதாதுவாகத்தான் இருக்கவேண்டும். இவ்விதம் மேதோதாது என்ற பித்தாசயம் திரவரூபமாக க்ஷயிப்பதால்தான் அதிஸாரத்தில் "லக்ஷணம் தஸ்ய காத்ரஸாதோ மலக்ஹர:" என்றும் கிரஹணீ ரோகத்தில் ஸாமாந்யம் லக்ஷணம் கார்ச்யம்" எனவும் சரீரத்தின் இளைப்பு முக்கியமாகக் காணப்படுகிறது.

மேலும் புரீஷம் என்பது புரீஷதரகலையில் நிறைவேற்றப் படவேண்டிய க்ஷயம், புரீஷதரகலையோவெனில் பக்வாசயம் என்ற அஸ்திதாதுவில் இருந்துகொண்டு "யாந்த: கோஷ்டே மலமபிவிபஜதே பக்வாசயஸ்தா எனக் கோஷ்டம் எனப்பெயர் கொண்ட ஸப்ததாதுக்களில் நின்றும் மலாம்சத்தைப் பிரித்து உதவுகிறது. இந்த விளக்கப்படி ஆயுர்வேதரீதியில் புரீஷம் என்பது பல அங்கங்களிலிருந்து பிரித்து வெளியேற்ற வேண்டிய பொருள். இதே புரீஷம் ஸர்வ சரீரவ்யாபியாக இருந்துகொண்டு தான் "அவஷ்டம்ப: புரீஷஸ்ய:" என நம்மை நிலைக்க வைக்கிறது. இதே புரீஷம் அதிக அளவில் சரீரத்தின் பல பாகங்களில் நின்றும் வெளியேரும் போது தான் நாம் சோர்வு உருகிறோம். இந்தப் புரீஷம் தான் "பலம் தஸ்ய ஹி விட்பலம்" என ராஜயக்ஷ்மிக்கு பலத்தைக் கொடுக்கிறது இது காரணமாகத் தான் போலும்,

"விரேக பஸ்தி வமநாதி ருதே குர்யாச்ச நாத்ய யாத்" |

ஸு. சா. 10. 41.

எனக் குழந்தைகளுக்கு இன்றியமையாத நிலையிலேயே விரேசனம் செய்யவேண்டும் என்கிறார் ஸுச்ருதர். இவ்விதம் ஸுச்ருதர் அபிப்பிராயப்படி பித்ததரைகலை தான் கிரஹணீ என்னும் பக்ஷத்தில் மேதோதாதுவில் அமைந்துள்ள பாகம் தான் கிரஹணீ

என்ருகிறது. ஆகவே மேதோதாது இல்லாத இடமே கிடையா தாகையால் கிரஹணீ ஸர்வ சரீர வ்யாபியாக உள்ளது என்பது தெரிய வருகிறது.

நிற்க கலா என்பதற்கு $\frac{1}{16}$ என மிகமிகக் குறைந்தது எனப் பொருள். தாது பரிணமக்ரமத்தில் அடுத்தடுத்து தாதுவாகப் பரிணமித்தது போகக் கடைசியில் மிஞ்சியதான மிகச்சிறிய பகுதி யையும் கலா எனச் சொல்லலாம் அதே தாதுவாக மிக மிகக் குறைந்த அளவில் எஞ்சிய கடைப்பகுதி எனப் பொருள்படுகிறது இதே அபிப்ராயத்தில்தான் அஷ்டாங்க ஸங்கிரஹக்காரர், 'யஸ்து தாத்வாசயாத ரேஷு க்லேதோ அவதிஷ்டதே யதா ஸ்வமுஷ்ம பிர்விபக்வ: ஸ்நாயு ச்லேஷ்ம ஜராயு சன்ன காஷ்ட இவ ஸார: தாது ரஸசேஷால்பத்வாத் கலா ஸம்ஞ்ய:'' என்று தாதுரஸ சேஷத்தை கலா எனக்குறிப்பிடுகிருர். ஆனல் வழக்கப்படி சரகர் ஸித்தாந்தம் வேருகவே தோன்றுகிறது. 7 கலைகள், 7 ஆசயங்கள் என்ற பிரிவு சரகத்தில் காணப்படவில்லை. அங்கு ஆமாசயம், பக்வாசயம் என்ற பெயர்கள் மட்டும் குறிப்பிடப்படுகின்றன. மேலும் "ஏவம் ரஸ மலா யான்னம் ஆசய ஸ்தமத: ஸ்தித: | பசத்யக்நி: எனப் பொதுவாக ஆசய என்ற சொல்லை ப்ரயோகம் செய்துள்ளது கவனிக்கத்தகுந்தது. பக்வாசயம் து ப்ராப்தஸ்ய என பக்வாசயம் என்ற சொல்லையும் உபயோகித்துள்ளார். எனவே பித்ததரா கலாதான் கிரஹணீ என்ற மதம சரகருக்கு ஸம்மதம் இல்லை போலும். ஆனல் சரகரும் அக்ன்யதிஷ்டான மந்நஸ்ய என கிரஹணியை விளக்குகிருர். இதே ஸந்தேஹம் அக்னிவேசருக்கும் எழுந்தது. அசிதம் காதிதம் பீதம் லீடம் ச க்வ விபச்யதே! என ஓர் கேள்வி எழுந்தது. இதன் விடையாவது.

"நாபிஸ்தநாந்தரம் ஜந்தோ ராமாசய இதிஸ்மிருத: |
அசிதம் காதிதம் பீதம் லீடம் சாத்ர விபச்யதே ||
ஆமாசயகத: பாகமாஹார: ப்ராப்ய கேவலம் |
பக்வ: ஸர்வாசயம் பச்சாத் தமநீபி: ப்ரபத்யதே'' ||

ச. வி. 2, 17–18.

நாபி முதல் ஸ்தநம் இறுதியாக உள்ள இடம் ஆமாசயம் எனப்படும் இங்கு ஆஹாரங்கள் பக்குவப்படுத்தப்பட்டு, தமனிகள் மூலம் எல்லா ஆசயங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. ஆனல் இந்த தமனிகளோ ஸிரைகளோ, ஸ்ஞயுக்களோ ஊஹித்தறிய வேண்டியவைகள் என்பதை "ஏதாவத் த்ருச்யம், சக்ய மபி நிர்தேஷ்டும் | அநிர்தேச்ய மத: பரம் தர்க்ய மேவ | (ச. சா. 7. 13–14). என சரகர் குறிப்பிடுகிருர். நிற்க சரகர்'' தே ஸர்வ

ஏவ தாதவோ மலாக்யா: ப்ரஸாதாக்யாச்ச ரஸ மலாப்யாம் புஷ்யந்த:, ஸ்வம் மானமனுவர்த்தந்தே யதாவய: சரீரம்|. (ச. ஸூ. 28 4.) என்று ஆகாரப் பொருள்கள் ப்ரஸாதம், மலம் எனப்பிரிக்கப்படுகின்றன எனக்கூறுகிருர். கிரமமான அடுத்தடுத்த பரிணுமமுறையில் வ்யான வாயுவால் வீசி எறியப் பட்ட ரஸதாது ஆங்காங்கு தங்கி அந்தந்த தாதுக்களால் கிரஹித்துக் கொள்ளப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டு பக்குவப் படுத்தப்பட்டு மாறுகிறது தனித்தெடுக்கப்பட்டு மாறும்வரை அந்த ரஸதாது இதர தாத்வம்சங்களுடன் கூடியதாகவே ஆங்காங்கு பாய்கிறது. பல அம்சங்கள் அதில் கலந்திருப்பதால் அந்த ரஸ தாதுவிற்கே நாபி என்ற காரணப் பெயர் பொருந்தும். இவைத்தான் ஸுச்ருதர் ஸகலவாப்யோ ரஸ: ஏகைகஸ்மின் தாதௌ த்ரீணி த்ரீணி கலா ஸஹஸ்ராணி, பஞ்சதச ச கலா: அவதிஷ்டதே|. ஏவம் ரஸ: மாஸேந சுக்ரோபவதி எனக் குறிப்பிடுகிருர். தவிரவும் தாதவோஹி தாத்வாஹாரா: என முதல் முதல்தாதுவே அடுத்தடுத்த தாதுவாகப் பரிணமிப்பது முண்டு. அவ்விதம் பரிணமிக்கும்போது ப்ரஸாதம் மலம் என்றே அது பிரிக்கப்படும். விவேசன ரூபமாக இந்தக் காரியத்தைச் செய்ய ஒவ்வொரு தாதுவிலும் கிரஹணீ அவசியமாகிறது இது "அன்னோதகரக்த மாம்ஸ மேதோஸ்தி மஜ்ஜ சுக்ர மூத்ரபுரீஷ ஸ்வேத வஹாநி" என்ற ச்ரோதஸ்ஸுகளில் தான் அமைந் திருக்கவேண்டும். இந்த அபிப்பிராயத்தில்தான் மது கோசவ்யாக் யாதாவும் சக்கரபாணிதத்தரும் கிரஹணியை நாபி என்றும் தமநி என்றும் குறிப்பிட்டார்கள். கலா என்பதும் சற்றேரக்குறைய தமனீ போன்றதே.

ஆகாசியாவ காசானும் தேஹே நாமானி தேஹினும் |
ஸிரா: ஸ்ரோதாம்ஸி மார்க்கா: கம் தமந்யோ நாட்ய ஈரிதா:||

எனக் காலி இடங்களை ஸிரை, தமநி, நாடி என்ற பெயர்களால் குறிப்பிடுகிருர்கள். இந்த தமனிகள் ஸிரைகள் அனைத்துக்கும் உற்பத்தி ஸ்தானம் நாடி எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. "அர்த்தே தச மஹாமூலா:" என ஹிருதயத்தில் பத்து தமனிகள் அமைந்துள்ளதாக விளக்கும் சரகரும் அர்த்தம் என்ற ஹிருதயத்தை "சோபா நஸீ நாமாகார கர்ணிகேன" எனப் பல இணைப்புகள் ஒன்றுசேரும் இடம் எனக்கூறுகிருர். அங்கு ஹ்ருதயம் எனக் குறிப்பிடப்படுவது எந்தப்பகுதி எனத்தனியே யோசிக்கவேண்டும். ஆனல் அதுவும் நாபி என அழைக்கப் படலாம்.

நிற்க, "சுக்ரவஹாநாம் ஸ்ரோதஸாம் ஸ்தநௌ மலம் வ்ருஷணம் ச" என சுக்ரவஹ ஸ்ரோதஸ்களுக்கு ஸ்தநத்தை

மூலமாகக் குறிப்பிடுகிருர்கள். எனவே ஆஹாரம் கடைசி தாதுவாகப் பிரித்தனுப்பப்படும் ஸ்தநத்தைத்தான் "நாபி ஸ்தநாந்தரம்" என்ற தொடருக்குப் பொருளாகக் குறிப்பிட வேண்டும் எனத்தோன்றுகிறது. இந்த விளக்கத்தின்படி, நாபியும் ஸ்தநமும் ஆமாசயத்தின் செயல்படும் எல்கைகள் அதாவது (functional boundaries (or) area of operation) எனப்படும். இவைகள் கோடுகிழித்துக் காட்டப்படும் எல்கைகள் அன்று. எனவே ஆகாரப் பொருள்கள் சுக்ரம் இருதியாக அமையும் பரிணமம் ஓர் சுழல் மார்க்கம் (circuit). இது நிகழும் இடம் ஆமாசயம். இவ்விதம் பக்குவமானபின் அந்தந்தப்பகுதிகள் தமனிகள் மூலம் கிரஹணியின் உதவியுடன் அந்தந்த ஆசயங் களுக்கு பிரித்துச் செலுத்தப்படுகின்றன.

இவ்விதம் ஆமாசயம் என்பதற்கு மிகச்சிறிய இரைப்பை முதல் ஸர்வ சரீரத்திலும் பரவியுள்ள ஸப்ததாதுக்கள் வரை பொருள் எனத் தோன்றுகிறது. ஆமாசயம் என்பதை விளக்கிய பின்னரே அதை வைத்துக்கொண்டு கிரஹணீ என்பதற்குப் பொருள் கூறுவது ஸாத்தியமாகிறது அது இல்லாமல் ஆமாசயம் என்பதைப் பலவிதமாக விளக்குவது பலவிதமான அபிப்ராய பேதங்களுக்கு இடமாகிறது. எனவே அக்னிக்கு ஆதாரம் கிரஹணீ. தோஷ தாது மலங்களில் அமைந்துள்ள ஊஷ்மாதான் அந்த அக்னி. அந்த ஊஷ்மா ஸர்வ சரீர வ்யாபி. எனவே அந்த அக்னிக்கு ஆதாரமான கிரஹணியும் ஸர்வ சரீர வ்யாபி. இவ்விதம் க்ரஹணீ சர்வ சரீர வ்யாபியாக இருந்துகொண்டு ஆஹாராதிகள் பக்குவமாவதற்கு உதவி புரிகிறது பக்குவமான பின்னர் அவைகளை "பார்ச்வத:" எனப் பக்கவாட்டின் வழியே கடத்துகிறது.

இந்த முறையை (mechanism of permiability of membranes) என்ற முறையோடு ஒத்துநோக்க, இரண்டும் ஒன்றுதானே எனத் தோன்றுகிறது இது விஷயம் மேலும் ஆராயப்படவேண்டும்.

நிற்க, அன்னத்தைத்தடுத்து நிறுத்தும் காரியத்தைச் செய்யாது ஆமமாகவே அவற்றைக் கடத்துவதோ, பக்குவமான பின்னரும் அதைப்பிரித்து அனுப்பாது வெளியேற்றுவதோ கிரஹணியின் சேட்டைக்குறிக்கிறது. எனவே விசேஷமாக "ஸாமம் ஸான்னம் அஜீர்ணே அந்நே ஜீர்ணே பக்வம் து நைவவா" என திரவரூபமான மலப்பிரவிருத்தி கிரஹணீயின் முக்ய லக்ஷணம் 'அதிஸாரோ அதிஸரணத் ஆசு காரி ஸ்வபாவத:" என அதிஸாரம் மிக விரைவில் தீங்கையோ மரணத்தையோ கொடுக்கக்கூடியது. கிரஹணீ ரோகமோ

வெனில் "சிரக்ருத் க்ரஹணீ ரோக:" என அவ்வப்பொழுது தொடர்ந்து வெகுகாலம் உபத்திரவத்தைக் கொடுப்பதுடன் நாளடைவில் தீங்கையும் மரணத்தையும் கொடுக்கக்கூடியது.

தவிர "யச்சாக்தி பூர்வமுத்திஷ்ட: ரோகாநீகே சதுர்வித: | தம்சாபி க்ரஹணீ ரோகம் ஸம வர்ஜ ப்ரசக்ஷ மஹே" | . என "மந்த தீக்ஷ்ண விஷமாக்னி"களும் க்ரஹணீ ரோகங்கள் எனப் படுகின்றன. ஆனல் சக்ரபாணி தத்தர் "அக்னிமாந்த்ய அஜீர்ணதயச்ச க்ரஹண்யாச்ரிதா தோஷா க்ருஹ்யந்தே | தே யத்யபி க்ரஹண்யாச்ரிதத்வே ந க்ரஹணீ ரோகா ஏவ | ததாபீஹ க்ரஹணீ ரூப நாடீ வ்யாபார வைபரீத்யேந யே ஜாயந்தே த ஏவ முக்யக்ரஹணீ சப்த வாச்யா, சத்வாரோ ரோகா: | வக்ஷ்யதி ச க்ரஹண்யா: துஷ்ட மதுஷ்டம் ச ரூபம் அபக்வம் தாரயத் யன்னமிதி | ந சேயம் பக்வாந்ந விமோக்ஷணு துஷ்டி ரக்னி தோஷே ஆமாத்யஜீர்ணே வா | அனேன விசேஷாபி தேய க்ரஹணீ சப்தத்வம் க்ரஹண்யாச்ரித தோஷ ஜன்ய க்ரஹணீ கதஸ்யைவோச்யதே | அக்னி தோஷாணும் ந விசேஷாத் க்ரஹணீ கதத்வம் | அதிஸாரே யத்யபி பக்வான்ன முஞ்சன மஸ்தி | ததாபி தஸ்ய பின்ன ஸம்ப்ராப்திகத்வாத்; ததா சிகித்ஸா பேதாத் க்ரஹணீ தோஷாதந்யத்வமுக்தம் | "

(ச. சி 15. 38-41).

என்று அபக்வமானவற்றைத்தடுத்து நிறுத்திப் பக்குவம் செய்ய உதவும் தொழில் சீர்கெடுவதால் ஏற்படும் கோளாறுகளுக்குத் தான் கிரஹணீ என்ற பெயர். அக்நி விகாரங்களிலோ, அதிஸாரம் முதலியவற்றிலோ இந்தச் சீர்கேடு இல்லாததால் அவை க்ரஹணீ ரோகம் அல்ல என்கிருர்.

பேளரோ,

"ததா ரோகா: ப்ரவர்த் தந்தே க்ரஹணீ தோஷஜான் ந்ருணும் |
ஜ்வர: காஸ: பாண்டுரோக: ச்வயது: பரிகர்த்திகா ||
அருசிச் சாவி பாகச் ச குல்மார்சாம்ஸி பகந்தரம் |
அதிஸாரச்ச குஷ்டம் ச ஶூலாந்யலஸ கோப்ரம: ||
ஏதாம் ச் சாந்யாம்ச்ச ஜநயேத் ரோகானஸ்ய விலாஸிந: |
க்ரஹணீ தூஷிதா ஜந்தோ: ஸமா ரோகா நிஹந்தி ச ||

என கிரஹணீயின் சீர்கேட்டால் உண்டாகும் ரோகங்களின் நீண்ட பட்டியலைக் குறிப்பிடுகிருர். மேலும், மந்த - விஷம - அத்யக்னி லக்ஷணுனி என மூன்று விதமான அக்நியின் குறிகளை விளக்கிவிட்டு, இத்யேஷ ரோகஸ் த்ரிவித: க்ரஹணீ ஸம்ஸ்ரிதோ மயாப்ரோக்த: (பே. சி. 13.). என அவற்றையே க்ரஹணீ ரோகம் எனக்கூறுகிருர்.

மலபந்தம்

சரீரத்தில் உணவுப்பொருளின் மூன்ருவது பரிணமநிலையில் – அவஸ்தா பாகத்தில் - பக்வாசயத்தில் வாயு உண்டாகின்றது. இந்த வாயு உடலில் பரவி பிராணன் முதலிய ஐந்து வாயுக்களைப் புஷ்டி செய்கிறது. அவைகளை சமநிலையில் காப்பாற்றி அவைகளின் மூலம் உடலில் இயற்கைச் செய்கைகளை நடத்துகிறது. வாயுவை சரீரத்தில் போஷிக்கவல்லதான துவர்ப்பு, காரம், கசப்பு சுவைமிக்கதும் வரண்டதுமான உணவை அளவுக்குமீறி சாப்பிடும்போது வாயுவின் உத்பத்தியும் அளவை மீறுகிறது. இதற்கு நேர்மாருக தித்திப்பு, புளிப்பு, உப்பு சுவைமிக்கதும் நெய் பசையுள்ளதுமான உணவை அதிகமாகச் சாப்பிட வாயுவின் அளவு குறைகின்றது.

துவர்ப்பு, காரம், கசப்பு மிக்கதும் வரண்டதுமான உணவை அதிகமாக ஏற்பதால் ஏற்படும் வாயு நிராம வாயுவாகும்.

இதில் அஜீர்ணமில்லை ஆனுல் ஜடராக்னியின் பலத்தையும் தனது உடல்வாகையும், ஸ்வஸ்தனுக்கான ஆகார நியமங்களையும் மதியாது, உணவுகளை ஏற்கும்போது அஜீர்ணமேற்பட்டு அன்ன ரஸம் உடலில் சேராமல், மலமதிகமாகி வெளியாகும். இவ்வித அன்னமலமாக வாயுவும் உண்டாகும் உணவு அஜீர்ணத்தால் ஏற்பட்ட இந்த வாயு ஸாம வாயுவாகும்.

நிராம வாயுவை அபதர்பணஜ வாயுவெனவும் ஸாமவாயுவை ஸந்தர்பணஜ வாயு வெனவும் குறிப்பிடலாம் இவ்விரு வேற்றுமைகளை மனதிற்கொள்ளுதல் அவசியம். ஜ்வரம் முதலிய ரோகங்களில் வாயுவைக்காரணமாகக்கொண்டநிலையில் லங்கனம் கூடாதெனக் கூறப்பட்டிருப்பது நிராமநிலையில்தான் பொருந்தும். ஸாமவாயு நிலையில் அஜீர்ணம் மாறும்வரை லங்கனம் அவசியமாகின்றது.

அறுவகை சுவைகளையும் மூன்று விபாகங்களையும் விவரித்துக் கூறுமிடத்தில் முடிவில் அவைகள் வாயு-மூத்திரம், மலம் இவைகளின் உற்பத்தியில் எவ்விதம் உதவுகின்றன என்பதைக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. மலம், மூத்ரம், வாயு இவைகள் நேரான முறையில் வெளியாவதால் ஆரோக்யமும், மாறுபட்டால் நோயும் ஏற்படுகின்றன. இந்த நோக்கில் இவைகளை ஆராய வேண்டும்.

இனிப்பு, புளிப்பு, உப்பு சுவைகள் ஸ்நிக்த குணமுள்ளவை யாதலால் வாயு, மூத்திரம், மலம் (சுக்கிலம்) இவைகளை நன்ருக வெளிப்படுத்துகின்றன. காரம், துவர்ப்பு, கசப்புச் சுவைகள் தனது இயற்கையான வரட்சி காரணமாக வாயு, மூத்திரம், மலம் சுக்கிலம் இவைகளை வளரச் செய்து கஷ்டப்பட்டு அவைகளை வெளியாக்கும் நிலையை ஏற்படுத்துகின்றன.

அம்மாதிரியே கடுவிபாகமும் வாதத்தைத் தூண்டுகிறது. சுக்கிலத்தைக் குறைக்கின்றது. அதனுல் புணர்ச்சியில் விருப்ப மின்மையும் சக்தியின்மையும் உண்டாகிறது. வரட்சியால் மலத் தையும் மூத்ரத்தையும் கட்டுகின்றது. அதனுல் மல, மூத்ரங்கள் சரியாக வெளியாவதில்லை. மதுரவிபாகம் கபத்தையும் சுக்கி லத்தையும் புஷ்டி செய்கின்றது. மலத்தையும் மூத்திரத்தையும் சுகமாகப் பிரியச் செய்கின்றது. அமலவிபாகத்தில் சுக்கிலம் நாசமாகிறது. ஆனுல் மலமும் மூத்திரமும் சுகமாக வெளியா கின்றன.

இதன் பொருள் என்னவென்ருல்: ரஸ குண — வீர்ய — விபாகங்களின் காரியங்கள் எத்தனை இருந்தாலும் அவைகளில் மலமூத்ரங்கள் வெளியாவதில் அவைகளின் செய்கையையே முக்ய மாக ஆசாரியர்கள் கருதுவதை நாம் உணரலாம். மலத்தின் தன்மையை அறிவதாலேயே சரீரத்தில் வாயு, பித்த கபங்களின் தன்மையை நாம் ஸுலபமாக அறியமுடியும். புகழும் ஊக்கமு முள்ள வைத்யன் வியாதி நிதானத்தில் மலத்தில் அதிக கவனம் செலுத்துவான். அதாவது தோஷங்கள் கோபமடைந்து தாதுக் களையும் அவ்விரண்டும் மலங்களையும் கெடுப்பதாலும், கெட்ட மலங்களின் நிலை மலத் துவாரங்களில் வெளிப்படுவதாலும் வியாதி சிகித்ஸையில் மல - மலத் துவாரங்களைப் பற்றி அறிவது அவசிய மாகிறது.

நிமோனியாவில் மந்திரம்.

மேற்கு ஆப்ரிக தேசமான நிகேரியாவில் உரக்ஷத (ப்ளூரிஸி)த் துடன் கூடிய நிமோனியா ஜ்வரம் கண்டவுடன் அந்நாட்டு வைத்தியன் நோயாளியின் மார்பின் அருகில் நின்று, "நோயின் காரணமான பூச்சியே வெளியே போ" என சில நிமிஷங்கள் கூறிக் கொண்டே இருப்பானும். இவ்விதம் ஏழு நாட்கள் வரை செய்ய ஆச்சரியகரமான முறையில் நிமோனியா—உரக்ஷதம் குண மாகிறதாம். இந்த விஷயம் டெல்லி இன்டர்நேஷனல் ட்யூபர் குலோஸிஸ் மகாநாட்டுக் காரியாலயத்திலிருந்து வெளியான "பிரிட்டிஷ் காலனிகளில் க்ஷயத்தடுப்பு" என்ற தலைப்பில் உள்ள டாக்டர் வின்ஸென்ட் ஹெட்ரீ என்னும் நிகேரிய மெடிகல் ஆபீஸரின் கட்டுரையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

இம்ப்காப்ஸ்

புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்பகாப்ஸ இநதிய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள, தரங்களை கண்டிப்பான முறையில பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருநதுகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிககும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யபபடுகிறது புராதன மருந்துகளை தயாரிப்பதில நவீன பாககிங் முறைகளையும் இயந்திரஙகளையும இம்பகாப்ஸ பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைள் பற்றிய இடைவிடாத ஆராய்சசியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இநதிய மருநதுகள் சம்பந்தமாக ஒரு மறுமலாசசியை உண்டாககப் பாடுபடுகிறது.

IMPCOPS

உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்

இமபகாப்ஸ் மருநதுகள எல்லா முக்கிய மருநது கடைகளிலும் கிடைககும்

இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.

அடையார், சென்னை 20.

விற்பனை நிலையங்கள்: 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, ஸொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.